

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் முன்னிலையில் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் மகளிருக்கு மின்சாரத்தில் இயங்கும் ஆட்டோ கடன் வழங்கும் விழா சேலம், அழகாபுரம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சமுதாயக் கூட்டத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., டி.எம்.செல்வகணபதி எம்.பி., சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், இரா.அருள் எம்.எல்.ஏ., எஸ்.சதாசிவம் எம்.எல்.ஏ. மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பங்கேற்றனர்.

### மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும்

# நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்த நாளில் அவரது நினைவைப் போற்றுவோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 2-

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**தமது நடிப்பாற்றலால் உலகையே வியக்க வைத்து வரலாறாக வாழ்ந்து மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களது பிறந்த நாளில் அவரது நினைவுகளைப் போற்றுகிறேன்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கரூர் த.வெ.க. கூட்ட நெரிசலில் சிக்கி

# உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கும் - காயமடைந்தவர்களுக்கும் நிதி உதவி!

## செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. நேரில் வழங்கினார்!

கரூர், அக்.2-

கரூரில் ஏற்பட்ட துயரச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் 5 நபர்களுக்கு தலா ரூ.1 லட்சத்திற்கான காசோலைகளையும், உயிரிழந்த 5 நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10லட்சத்திற்கான காசோலைகளையும் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி 28.09.2025 அன்று கூட்ட நெரிசல் காரணமாக உயிரிழந்தவர்களில் 18 நபர்களின் குடும்பத்ினருக்கு தலா ரூ. 10 லட்சத்திற்கான காசோலைகளை வழங்கியதைத் தொடர்ந்து,

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காயமடைந்து தீவிர சிகிச்சை பெற்று வரும் 5 பேருக்கு தலா ரூ.1 லட்சம் காசோலைகளையும்.

கரூர் ரெத்தினம்சாலை பகுதியைச் சேர்ந்த சுமதி (50), காமராஜபுரம் பகுதியைச் சேர்ந்த ஆகாஷ் (23), வேலுச்சாமிபுரம் பகுதியைச் சேர்ந்த பழனியம்மாள்(11), கோகிலா(14), சுகுணா (65), எல்என்.எஸ் கிராமம் பகுதியைச் சேர்ந்த ரவிகிருஷ்ணன் (32), உள்ளிட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று உயிரிழந்த நபர்களின் வீட்டிற்கு நேரில் சென்று அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10லட்சத்திற்கான காசோலைகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார்.

முன்னதாக கரூர் பாரதி நகர் பகுதியைச் சேர்ந்த கவின் (31), பிச்சம்பட்டி பகுதியை சேர்ந்த விஜயராணி(42), அரவக்குறிச்சி குமராண்டான்வலசு பிருந்தா (21), தொக்குபட்டி பகுதியைச் சேர்ந்த அஜிதா (20), வேலாயுதம்பாளையம் பகுதியை சேர்ந்த திருமதி ஜெயந்தி (45) உள்ளிட்ட பகுதிகளுக்கு உயிரிழந்த நபர்களின் வீட்டிற்கு நேரில் சென்று அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10.லட்சத்திற்கான காசோலைகளை அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி ஆகியோர் வழங்கினார்கள்.

மேலும் உயிரிழந்த நபர்களில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் அவர்களுடைய குடும்பத்தினரிடம் வழங்கப்பட இருக்கிறது.

இந்த நிகழ்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் வெ.கவிதா, துணை மேயர் ப.சரவணன், மருத்துவக் கல்லூரி முதல்வர் புவித்தா, மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 224 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, அக். 2 -

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 224 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (01.10.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55 ஏழு கிணறு தெரு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில். துறைமுகம் மேற்கு பகுதி: 2) 57வது வட்டம், ஜட்காபுரம், யானைகவுனி பாலம் அருகில், வால் டாக்ஸ் ரோடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து





சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.





